1983 பிப்ரவரி 15]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) வீடுகட்டத்தரும் கடன் உதவியை கிராமப்புற பகுதிகளில் ரூ. 3,000-லிருந்து ரூ. 4,000 ஆகவும்; நகர்புற பகுதிகளில் ரூ. 6,000-லிருந்து ரூ. 8,000 ஆகவும் உயர்த்தி 7—7—1982-ல் மத்திய அரசு ஆணையிட்டுள்ளது.

(இ) 7—7—1982-க்குப்பின் 3,822 குடும்பத்தினர் இந்தியா வந்துள்ளனர். இது தவிர சுமார் ஒரு லட்சம் மக்கள் இன்னும் தாயகம் திரும்ப இருக்கிறார்கள். இந்தக் குடும்பங்கள் பயன் பெறும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிவிப்பின்படி நம்முடைய மாநில அரசு எவ்வளவு பேருக்குக் கடன் வழங்கியுள்ளது? அப்படி வழங்கப் படுகின்ற தொகையில் மத்திய அரசு உதவித் தொகை எவ்வளவு என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நிதி யுதவியோடுதான் தமிழ்நாட்டில் இதுவரையில் 28,048 இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்கான கடனை அளித்து இருக்கிறோம்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் :

[201—400 எண். உடுக்குறியிடாத வினாக்களையும் விடை களையும் தனி இணைப்பில் 1—114-ம் பக்கங்களில் காண்க. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகளில் (ஆ) பிரிவில் இனம் 38 ஆக வைக்கப் பெற்றுள்ளது.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) நிதிநிலை அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ் 1983—84-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 5—3—1983ஆம் தேதி, சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டு மென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS